THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 20th July 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : முதலில் கேள்விகள், பதில்கள். இன்று மொத்தம் 20 கேள்விகள் இருக்கின்றன. ஆகையால் முக்கியமான கேள்விகளுக்குத் தான் உப கேள்விகள் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் ஸ்ரீ. கே. சட்டநாத கரையாளர் நோட்டீஸ் கொடுத்துள்ள கேள்வியாகிய 153-வது கேள்வியை எடுத்துக்கொள்ளலாம். ஸ்ரீ ஆதிமூலம் அந்தக் கேள்வியைப் போடுகிறார்.

Block Advisory Committee

* 153 *Q.*—SRI D. S. AUTHIMOOLAM (on behalf of SRI K. Sattanatha Karayalar) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any non-official member is associated with the Block Advisory Committee;

(*b*) if so, to what extent;

(*c*) whether there is any proposal for giving non-officials greater measure of responsibility in the Planning and Development of the Community Development Scheme;

(*d*) if so, the details thereof; and

(*e*) whether this Government have received any advice to this effect from the Union Community Development Ministry?

64790

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) Four non-official members are appointed to serve as members of each National Extension Service Block Advisory Committee. The M.L.As. representing the area are also appointed to serve as members of such Committees. In respect of Community Development Blocks six non-officials including the M.L.A. or M.L.As. representing the area are appointed as non-official members.

(*c*) Yes. There is a proposal to appoint non-official as Chairman or Vice-Chairman of these Committees.

(*d*) The details are under consideration of Government.

(*e*) Yes.

SRI A. R. SUBBIAH MUDALIAR : எம். எல்.எக்களும், எம்.எல்.சி.க்களும் இந்தக் கமிட்டிகளில் 'நான் அபிஷியல்' மெம்பர்களாக நியமிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சட்டசபை கூடும்போது இந்த advisory கமிட்டிகளும் கூட்டப்படுகின்றன. ஆகவே, சட்டசபை கூடும் சமயத்தில்

இந்த advisory கமிட்டிகளின் கூட்டங்களைப் போடக்கூடாது என்றும், அந்த சமயத்தில் வரக்கூடிய கமிட்டிகளின் கூட்டங்களை ஒத்திவைக்க வேண்டும் என்றும் சர்க்கார் ஏதாவது உத்தரவு அனுப்பியிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றி முன்பே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது கவனிக்கப்படும்.

SRI S. LAZAR : இதுபோன்ற குழுக்களில், ஐந்தாண்டுத் திட்டத்திலோ சமுதாய அபிவிருத்தித் திட்டத்திலோ நம்பிக்கையில்லாத கட்சிகளின் சார்பில் இருக்கும் அங்கத்தினர்களும் அங்கம் வகிப்பார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பிரதேசங்களில் உள்ள எம்.எல்.ஏ.க்களை கட்டாயம் அங்கத்தினர்களாக எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் திட்டத்தில் நம்பிக்கை இல்லாத எந்தக் கட்சியும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

SRI A. A. RASHEED : Sir, will the Hon. Minister introduce the Block Development Scheme in Tiruppattur taluk?

THE HON. SRI C. SUBRAMANIAM : This supplementary does not arise out of the main question.

MR. SPEAKER : There is no relation between the supplementary and the main question.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : நிர்மாண வேலைத் திட்டங்கள் நிறைவேற்றி வரும் தாலுகாக் காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசிகளும் இந்தக் கமிட்டிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசிகள் என்பதற்காக யாரும் இந்தக் கமிட்டிகளில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். இந்த அபிவிருத்தித் திட்டங்களில் அக்கறை எடுத்துக்கொள்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு விதிகளில் இடம் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : Sir, may I know on what basis the members are selected for the block advisory committees?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கு முன்பே பதில் சொன்னேன். அப்போது தமிழில் சொன்னேன். மறுபடியும் ஆங்கிலத்தில் பதில் சொல்ல வேண்டுமா என்று கனம் அங்கத்தினரைக் கேட்க விரும்புகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : சமுதாய அபிவிருத்தித் திட்டத்திற்கு எந்த அடிப்படையில் பிளாக்குகள் எடுக்கப்படுகின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கும் முன்பே பதில் சொன்னேன்.

Southern Regional Seminar of Key Village Officers

MR. SPEAKER : Question No. 154. I find the hon. Member Sri K. N. Palaniswami Gounder is not in his seat.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I put the question.

MR. SPEAKER : The hon. Member must be alert. Otherwise I will pass on to the next question.